சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. MCOP. 23/2017**

2025ம் ஆண்டு ஜூன் மாதம் 06ம் நாள் வெள்ளிக்கிழமை

2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய **எ.ம.சா.1-**இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திரு.வ.சிவக்குமார், எழுத்தர் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சபாபதி | தொழில் | கூலி வேலை |
| தந்தை பெயர் | கண்ணன் | ஜாதி | |
| கிராமம் | 12புத்தூர் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 45 |

**06.06.2025 முதல் விசாரணை**

நீதிமன்றம் மூலம் அழைப்பாணை அனுப்பப்பட்டு அழைப்பாணையின் பேரில் சாட்சி ஆஜர்.

1. விபத்து ஏற்படுத்திய TN25AS5477 என்ற டிராக்டரின் உரிமையாளர் நான் தான். விபத்து சமயத்தில் அந்த வாகனத்தை நான் தான் ஓட்டினேன். விபத்து நடந்த சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தற்போது முடியாது. விபத்து நடந்த தேதி 07.11.2016 ஆகும். இரவு 10.30 மணிக்கு நடந்தது. வித்துவாந்தாங்கல் ஆறுமுகம் என்பவரின் நிலத்தை ஓட்டுவதற்காக சென்ற போது ரோட்டில் விபத்து நடந்தது. விபத்தில் இறந்து போன மறவன் டிராக்டரின் இடது பக்க மட்காடில் ஓட்டுநர் அருகில் அமர்ந்துள்ளார். டிராக்டரில் சென்றுகொண்டிருந்த போது அவர் தவறி விழுந்ததால் விபத்து ஏற்பட்டது. மறவன் என்னிடம் வேலை செய்து வந்திருந்தாரா என்றால் இல்லை. விபத்து நடந்த சமயத்தில் டிராக்டர் மட்டும் தான் எடுத்து சென்றேன். டிரெய்லர் வீட்டில் இருந்தது. விபத்து நடந்த சமயத்தில் டிராக்டர் மற்றும் டிரெய்லரை 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்திருந்தேன். டிராக்டரின் பதிவு தரப்பில் சீட்டிங் கெபாசிடி ஒரு நபர் என்று உள்ளது என்றால் சரிதான். டிரைவரை தவிர டிராக்டரில் வேறு யாரையும் ஏற்றகூடாது என்ற விவரம் எனக்கு தெரியும். மோட்டார் வாகன சட்டப்படியும் விதிப்படியும் பதிவுச்சான்று மற்றும் பாலிசி சான்றுபடியும் டிராக்டரில் 3ம் நபரை ஏற்றிச் சென்றது தவறானது என்றால் தவறு தான். அவ்வாறு 3ம் நபரை ஏற்றிச்சென்று விபத்து ஏற்பட்டால் காப்பீடு நிறுவனம் காப்பீடு வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

(மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)